## இந்தியாவிலேயே முதல் 5 இடங்களிலுள்ள முதலமைச்சர்களில் மு.க.ஸ்டாலின் தொடர்ந்து இடம் பெறுகிறார்!

## கடந்த நாடாளுமன்றத் தேர்தலை விட தற்போது

# தி.மு.க. கூட்டணியின் வாக்குகள் 5 சதவிகிதம் அதிகரிப்பு!

## ‘இந்தியா டுடே’ - ‘சி வோட்டர்’ கருத்துக் கணிப்பு!

புதுடெல்லி, பிப். 14 -

**“இந்தியாவிலேயே முதல் 5 இடங்களிலுள்ள முதலமைச்சர்களில் தொடர்ந்து இடம் பெறுகிறார் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் என்றும், கடந்த நாடாளுமன்றத் தேர்தலை விட தி.மு.க. கூட்டணி 5 சதவிகித வாக்குகள் அதிகம் பெற்று முன்னணியில் உள்ளது” என்றும் ‘இந்தியா டுடே’ - ‘சி வோட்டர்ஸ்’ கருத்துக்கணிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:-**

தமிழ்நாட்டில் தற்போது நாடாளுமன்றத் தேர்தல் நடந்தாலும் திமுக கூட்டணி 39 இடங்களில் வெற்றி பெறும். 2024 நாடாளுமன்றத் தேர்தலில் எந்த கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்காத நிலையில், மக்களின் தற்போதைய மனநிலை குறித்து இந்தியா டுடே - சி வோட்டர் இணைந்து கருத்துக் கணிப்பு நடத்தியுள்ளது.

அதில் தமிழ்நாட்டை பொறுத்தவரை தற்போது தேர்தல் நடத்தினாலும் திமுக தலைமையிலான கூட்டணியே 39 இடங்களிலும் வெற்றி பெறும் என்று கணிக்கப்பட்டுள்ளது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் திமுக கூட்டணி 47 விழுக்காடு வாக்குகளைப் பெற்றிருந்த நிலையில், தற்போது தேர்தல் நடைபெற்றால் 52 விழுக்காடு வாக்குகளைக் கைப்பற்றலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



### ‘சி வோட்டர்’ நிறுவனர் யஷ்வந்த் தேஷ்முக் பேட்டி!

இது குறித்து சி வோட்டர் நிறுவனத்தின் நிறுவனரும் இயக்குனருமான யஷ்வந்த் தேஷ்முக் அவர்கள் அளித்த பேட்டி வருமாறு:-

**• தற்போதைய சூழலில் தமிழ்நாட்டில் திமுகதான் முன்னிலையில் உள்ளது. எதிர்க் கட்சிகள் குழப்பத்தில் இருக்கின்றன.**

**நாடாளுமன்றத் தேர்தலில் திமுக கூட்டணி 50 சதவீதத்திற்கும் மேற்பட்ட வாக்கு வங்கியைக் கொண்டிருக்கிறது.**

**எந்த ஒரு கூட்டணியும் 50 சதவீதத்திற்கும் அதிகமான வாக்கு வங்கியைக் கொண்டிருப்பது சாதாரணமான விஷயம் அல்ல. தி.மு.க. தலைவர்களுக்கு எதிராக எந்த அதிருப்தியும் நிலவவில்லை. இது திமுகவுக்கு மிகவும் நல்லது.**

**தமிழ்நாட்டில் இன்றும் திராவிட அரசியல் தான் நிலவுகிறது. அதில் சந்தேகமில்லை.**

**பெரும்பான்மையான வாக்காளர்களுக்கு குழப்பமே இருப்பதில்லை அவர்கள் இரு துருவ அரசியலையே விரும்புகிறார்கள்.**

**தமிழ்நாட்டில் மும்முனைப் போட்டி அல்லது நான்கு முனைப் போட்டி என வந்தால், அது தி.மு.க.வுக்குத் தான் சாதகமாக அமையும். இப்போதைய சூழலில் தி.மு.க. வை எதிர்த்து அதிகாரத்தைப் பிடிக்கும் வகையில் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைய வாய்ப்பில்லை.**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், பிரபலமான தலைவராக இருக்கிறார். தொடர்ச்சியாக அவர் 5 டாப் முதலமைச்சர்களின் பட்டியலுக்குள் இருக்கிறார். 6 மாதங்களுக்கு ஒருமுறை கணக்கெடுத்தாலும், இந்த 5 டாப் முதலமைச்சர்களின் பட்டியலைவிட்டு மு.க.ஸ்டாலின் வெளியேறியதில்லை. இது சாதாரண விஷயம் இல்லை.**

**மு.க.ஸ்டாலினைப் பொருத்தவரை, அவர் தேசிய அளவில் டாப் முதலமைச்சராகவும் இருக்கிறார். மாநிலத்திலும் அவரை சிறந்த முதலமைச்சராக மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். இது அவருக்கு மிகப்பெரிய பலம்.**

**இன்றைக்கு நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றாலும் தமிழ்நாட்டில் திமுக 39 இடங்களிலும் வெற்றி பெறும்.**

**தற்போது திமுக வலுவான இடத்தில் இருப்பதற்கு அதன் தலைவரும், தொண்டர்களுமே காரணம்.**

**திமுகவைப் பொருத்தவரை சட்டமன்றத் தேர்தலோ, நாடாளுமன்ற தேர்தலோ, ஒரே மாதிரியான வாக்கு வங்கிதான்.**

**திராவிட அரசியல் - தேசியவாத அரசியல் ஆகியவற்றை தி.மு.க. மிக அழகாக கையாண்டு வருகிறது.**

**தமிழ்நாட்டு மக்கள் ஸ்டாலின் மீது மிகவும் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். இந்த நம்பிக்கை அவர் வாரிசு அரசியல்வாதி என்பதால் வரவில்லை. அவர் தனது தந்தையால் மட்டும் செல்வாக்கு பெறவில்லை. ஸ்டாலினுக்கே தனியான ஈர்ப்பு சக்தி இருக்கிறது. அவரே மக்களைக் கவரக்கூடியவராக இருக்கிறார்.**

இவ்வாறு யஷ்வந்த் தேஷ்முக் அவர்கள் கூறியுள்ளார்.

---

## தமிழ்நாடு அமைச்சரவையில் மாற்றம்!-

# அமைச்சர் பொன்முடிக்கு கூடுதல் இலாகா!



சென்னை, பிப்.14-

தமிழக அமைச்சரவையில் சிறிய அளவில் மாற்றம் செய்து அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, அமைச்சர்கள் ராஜ கண்ணப்பன், பொன்முடிக்கான துறைகள் மாற்றம் செய்து ஆளுநர் மாளிகை அறிவித்துள்ளது.

அமைச்சர் ராஜ கண்ணப்பனிடம் இருந்த காதி மற்றும் கிராம தொழில் துறை பொன் முடி கவனிப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வனத்துறை அமைச்சராக உள்ள பொன்முடி காதி மற்றும் கிராம தொழில்கள் துறையை கூடுதலாக கவனிப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் ராஜ கண்ணப்பன் பால்வளத் துறையை மட்டும் கவனிப்பார் என ஆளுநர் மாளிகை அறிவித்துள்ளது.

---

## பெங்களூரு ஐ.ஐ.எம். நிறுவனத்தில் அரசு திட்டங்களுக்குப் பயன்படும் வகையில்

# புள்ளி விவரங்கள் தொகுப்பது குறித்து 3 நாட்கள் சிறப்புப் பயிற்சிகள்!

### தமிழ்நாடு அரசின் பல்வேறு துறை சார்ந்த 25 அலுவலர்கள் பங்கேற்பு!

சென்னை, பிப். 14-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவுப்படி தமிழ்நாட்டு வரலாற்றில் முதன் முறையாக பெங்களூரு ஐ.ஐ.எம். நிறுவனத்தில் அரசுத் திட்டங்களுக்குப் பயன்படும் வகையில் புள்ளி விவரங்கள் தொகுப்பது குறித்து நேற்று முதல் 3 நாட்களுக்கு (பிப்ரவரி 12 முதல் 14 வரை) சிறப்புப் பயிற்சிகள் நடைபெறுகிறது. இதில் தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகள் சார்ந்த 25 அலுவலர்கள் பங்கேற்கின்றனர்.

நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் 2024-2025 ஆம் ஆண்டிற்கான மனித வள மேலாண்மைத் துறையின் மானிய கோரிக்கையின் போது 26.06.2024 அன்று சட்டமன்றத்தில்

“அரசு பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டங்கள் முறையாக மக்களிடம் சென்றடைகிறதா என்பதனை ஆய்வு செய்யவும், தகுதியுடைய பயனாளிகள் எவரேனும் விடுபட்டு விட்டனரா என்பதை கண்டறியவும், கடைக்கோடி மக்களுக்கும் அரசின் திட்டங்கள் சென்றடையவும், இதன் வாயிலாக அரசுத் திட்டங்களை மேலும் செம்மைப்படுத்தவும் அரசு அலுவலர்களுக்கு தரவுப் பகுப்பாய்வு (Data Analysis) குறித்து சிறப்புப் பயிற்சி அளிக்கப்படும். இந்நிதியாண்டில் இதற்கென ஐம்பது இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்படும்”. எனும் அறிவிப்பை வெளியிட்டார்கள்.

இந்த அறிவிப்பினை நடைமுறைப்படுத்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டிருந்தார்.

இவற்றின் அடிப்படையில், தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் மற்றும் நிதித்துறையின் முதன்மைச் செயலாளர் ஆகியோரின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு அரசின் வரலாற்றிலேயே முதல் முறையாக பல்வேறு அரசுத் துறைகளின் புள்ளி விவரங்களை அறிவியல் முறையில் தொகுத்தல் குறித்து பெங்களூருவில் உள்ள இந்திய மேலாண்மை நிறுவனம் (Indian Institute of Management (IIM), Bangalore) ”Business Analytics - Science of Data Driven Decision Making ” 12.02.2025 முதல் 14.02.2025 வரை மூன்று நாள்களுக்கு வழங்கப்படும் பயிற்சிகளில் பங்கேற்பதற்காக பல்வேறு அரசுத் துறைகளிலிருந்து 25 அலுவலர்கள் தமிழ்நாடு அரசினால் அனுப்பப்பட்டுள்ளனர்.

இவர்கள் முதல்வரின் முகவரித் துறை, தமிழ்நாடு மின் ஆளுமை, கூட்டுறவுத்துறை, பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் துறை, கருவூலம் மற்றும் கணக்குத் துறை, வணிகவரித் துறை, சென்னை மநாகராட்சி, பேரூராட்சிகள் இயக்ககம், பதிவுத்துறை, மின் பகிர்மானக் கழகம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, காவல் துறை, மனிதவள மேலாண்மைத் துறை, தமிழ்நாடு குற்ற ஆவணக் காப்பகம், வேளாண் துறை, ஆகிய துறைகள் சார்ந்த அரசு அலுவலர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பயிற்சிக்காக தமிழ்நாடு அரசு மொத்தம் 35 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்தியாவிற்கே முன்னோடியாக பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இவ்வரசு செயல்படுத்தி வரும் திட்டங்கள் அனைத்தும் யாருக்கும் விடு படாமல் கடைக்கோடி மக்கள் அனைவரையும் சென்றடைய வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளபடி இப் பயிற்சித் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

---

# மணிப்பூரில் குடியரசுத் தலைவர் ஆட்சி அமல்

இம்பால், பிப்.14

மணிப்பூரில் குடியரசு தலைவர் ஆட்சி அமல்படுத்தப்பட்டதாக உள்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.

மணிப்பூர் முதலமைச்சர் பைரன் சிங் தனது பதவியை ராஜினாமா செய்த நிலையில் குடியரசு தலைவர் ஆட்சி அமலுக்கு வந்தது. இரு பழங்குடியினர் சமூகத்தினர் இடையே நடந்த மோதலை முடிவுக்கு கொண்டு வர முடியாததால் 9-ஆம் தேதி பைரன் சிங் ராஜினாமா செய்தார்.

புதிய முதல்வரை தேர்வு செய்து பா.ஜ.க. அறிவிக்காத நிலையில் குடியரசு தலைவர் ஆட்சி அமலுக்கு வந்ததாக அறிவிப்பு வெளியாகியுள்ளது.

---

## ஈரோடு, திருப்பூர், விழுப்புரம், மதுரை ஆகிய மாவட்டங்களில் அடங்கியுள்ள சட்டமன்றத் தொகுதிகள் - மாவட்டப் பொறுப்பாளர்கள் நியமனம் !

### தலைமைக் கழக அறிவிப்பு

**கழக நிர்வாக வசதிக்காகவும் கழகப் பணிகள் செம்மையுற நடைபெற்றிடவும் ஈரோடு, திருப்பூர் விழுப்புரம், மதுரை ஆகிய மாவட்டங்களில் உள்ள சட்டமன்ற தொகுதிகள் மாற்றியமைக்கப்படுகிறது. அதோடு சில மாவட்டங்களுக்கு பின்வருமாறு புதிதாக பொறுப்பாளர்களும் நியமிக்கப்படுகிறார்கள்.**

| மாவட்டம் | மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்ற தொகுதிகள் | செயலாளர்கள் / பொறுப்பாளர்கள் |
|---|---|---|
| ஈரோடு தெற்கு | ஈரோடு கிழக்கு<br>ஈரோடு மேற்கு<br>மொடக்குறிச்சி | மாண்புமிகு **சு.முத்துசாமி** |
| ஈரோடு வடக்கு | அந்தியூர்<br>பவானி சாகர்<br>கோபிசெட்டிப்பாளையம் | திரு. **என்.நல்லசிவம்** |
| ஈரோடு மத்திய | பவானி<br>பெருந்துறை | திரு.**தோப்பு வெங்கடாசலம்** |
| திருப்பூர் கிழக்கு | பல்லடம்<br>திருப்பூர் தெற்கு | திரு.**க.செல்வராஜ்** எம்.எல்.ஏ., |
| திருப்பூர் மேற்கு | காங்கேயம்<br>தாராபுரம் | மாண்புமிகு **மு.பெ.சாமிநாதன்** |
| திருப்பூர் வடக்கு | அவினாசி<br>திருப்பூர் வடக்கு | திரு. **என்.தினேஷ்குமார்** |
| திருப்பூர் தெற்கு | உடுமலைப்பேட்டை<br>மடத்துக்குளம் | திரு. **இல. பத்மநாபன்** |
| விழுப்புரம் வடக்கு | செஞ்சி<br>மயிலம்<br>திண்டிவனம் | செஞ்சி **கே.எஸ்.மஸ்தான்**.எம்.எல்.ஏ. |
| விழுப்புரம் தெற்கு | திருக்கோவிலூர்<br>விக்கிரவாண்டி | திரு. **கௌதம சிகாமணி** |
| விழுப்புரம் மத்திய | விழுப்புரம்<br>வானூர் | டாக்டர் **ஆர்.லட்சுமணன்** எம்.எல்.ஏ. |
| மதுரை வடக்கு | மேலூர் சோழவந்தான்<br>மதுரை கிழக்கு<br>மதுரை மேற்கு | மாண்புமிகு **பி.மூர்த்தி** |
| மதுரை மாநகர் | மதுரை வடக்கு<br>மதுரை மத்திய<br>மதுரை தெற்கு | திரு. **கோ. தளபதி** எம்.எல்.ஏ., |

“அண்ணா அறிவாலயம்”
சென்னை - 18
நாள் : 13 - 02 - 2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.